**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**நாள்.23.10.2025**

**O.S. No.132/2020**

**வா.சா.1- மீனாட்சி**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 பற்றி தெரியுமா என்றால் எனக்குப் படிக்கத் தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ன் அசல் ஆவணத்தைப் பிரதிவாதியிடமிருந்து திரும்ப பெற கேட்டு பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் 3 சொத்து காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் உள்ள சர்வே எண்.431/3C, 431/15. 432/2B சொத்துக்களில் சர்வே எண் 432/2B குறித்து விளம்புகைப் பரிகாரம் கேட்டு வழக்குத் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1ல் உள்ள சர்வே எண்.431/3C, 431/15 சொத்தினை நான், எனது கணவர் மார்த்தாண்டம் என்பவருக்கு வா.சா.ஆ.3 செட்ல்மெண்ட் ஆவணம் மூலமாக 25.05.2016 ல் எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 என்னால் காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்டுள்ள புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதில் எனது கையொப்பம் இல்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.4 அசல் ஆவணத்தை பிரதிவாதியிடம் கேட்டு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி புகாருக்கான புகார் மனு ரசீது இந்த வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6ன் படி எனது பெயருக்கு பட்டா வா.சா.ஆ.1ன் அசல் அடிப்படையில் ஏற்பட்டுள்ளது என்றால் பட்டா மாற்றியபிறகு 2008-ல் எங்களிடம் அசல் ஆவணத்தைப் பெற்றுவிட்டார்கள். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ன் படி வங்கியில் கடன் ஆனது வா.சா.ஆ.1ன் அசல் அடிப்படையில் பெறப்பட்டது என்றால் வங்கியில் அசல் ஆவணத்தை கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 அறிவிப்பில் 27.09.2018-ல் அசல் ஆவணத்தினை ஜெயக்குமார், த/பெ.வேலு, துரைராஜ், த/பெ.பெருமாள் ஆகியோர் முன்னிலையில் ரூ.10000/-ஐ பிரதிவாதி, வாதியிடம் கொடுத்த நிலையில் அசல் ஆவணத்தினை வாதியின் கணவர்

மார்த்தாண்டம் பிரதிவாதிக்கு கொடுத்துள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 பதில் அறிவிப்பில் மேற்படி சங்கதியை எங்கள் வழக்கறிஞர் குறிப்பிட்டு மறுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது வழக்குச் சொத்தை 21.10.2021ல் நான் ஞானப்பிரகாசி என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டேன் என்றால் சரிதான். எனது கணவருக்கு செட்டில்மெண்ட் கொடுக்கப்பட்ட சொத்துக்கள் எனது கணவரால் 29.03.2021ல் ஆவண எண்.741/2021ன் படி ஞானப்பிரகாசி என்பவருக்கு கிரையம் கொடுக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். தற்சமயம் தபசில் சொத்துக்களில் எனக்கு எந்தவிதமான உரிமை மூலமும் கிடையாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 அசலை பயன்படுத்தி தான் அனைத்து விதமான பரிமாற்றங்களும் என்னால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ன் அசல் ஆள் மாறாட்டம் மூலம் பிரதிவாதி பெயரில் கையொப்பம் இட்டு உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம், அதனால் பிரதிவாதியால் கொடுக்கப்பட்ட புகார் மீது தென்காசி DCB காவல் நிலையத்தில் விசாரணை செய்து இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 419, 423, 465, 467, 468, 472, 420 ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற எண்.5/2022 என் மீதும், எனது கணவர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டோம் பின்னர் பிணையில் வெளியே வந்தோம் தற்போது இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு நில அபகரிப்பு நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அது பொய்யான வழக்கு. என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.5/2022 என் மீது பதிவு செய்யப்பட்டது என்றால் எனக்குப் படிக்கத் தெரியாது. வா.சா.ஆ.1 ன் அசல் ஆள் மாறாட்டம் மூலம் பிரதிவாதி பெயரில் கையொப்பம் இட்டு உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டிருப்பதால் அதில் இருந்து தப்பிக்க வேண்டி இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளேன் அதனால் குற்ற வழக்கு முதலில் பதிவு செய்யப்படவில்லை பின்னர் நீதிமன்ற உத்தரவின் பேரில் முதல் தகவல் அறிக்கை குற்ற எண்.5/2022 என் மீது பதிவு செய்யப்பட்டது என்றால் தெரியாது.

இந்த வழக்கில் ஒட்டுமொத்த சொத்துக்கும் பரிகாரம் கேட்காமல், வா.சா.ஆ.1 ல் உள்ள ஒரு சொத்துக்கு மட்டும் பரிகாரம் கேட்டுள்ளேன் அது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அசல் வழக்கு வா.சா.ஆ.1 ன் அசல் ஆள் மாறாட்டம் மூலம் பிரதிவாதி பெயரில் கையொப்பம் இட்டு உற்பத்தி செய்யப்பட்ட ஆவணத்தைப் பயன்படுத்தி அதன் மூலமாக விளம்புகைப் பரிகாரம் கேட்பதால், இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தை ஞானப்பிரகாசி கிரையம் பெற்ற அவர்தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். ஞானப்பிரகாசியின் உடன்பிறந்த சகோதரர் மருதையா என்றால் சரிதான். ஞானப்பிரகாசியின் உடன்பிறந்த சகோதரர் மருதையா காவல்துறையில் பணிபுரிகிறார் என்றால் சரிதான். மேற்படி மருதையா பிரதிவாதியிடமிருந்து பணம்பெற்று ஒரு சொத்தைக் கிரையம் பெற்றுள்ளார் என்றால் தெரியாது. வழக்குச் சொத்து மற்றும் இதர எனது சொத்துக்களை வங்கியில் அடமானம் வைத்திருந்தேன் என்றால் ஸ்டேட் பேங்கில் அடமானம் வைத்திருந்தேன். அடமானத்தை திருப்பும்போது மருதையா உதவி செய்தார் என்றால் இல்லை. ராமலிங்காபுரத்தில் நான், மருதையா, ஞானப்பிரகாசி வசித்து வருகிறோம் என்றால் சரிதான். மேற்படியார்கள் மருதையா, ஞானப்பிரகாசி எனக்கு உறவினர்கள் என்றால் சரியல்ல. மருதையா, ஞானப்பிரகாசி நாங்கள் ஒரே சமூகத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். எனது கணவருடன் பிறந்தவர்கள் சுப்பையா, பெருமாள் என்றால் சரிதான். எனது கணவருக்குப் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தை மருதையா கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.1 ல் கண்ட சொத்தும், எனது கணவருக்குப் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்தை மருதையா கிரையம் பெற்ற சொத்தும் அருகருகே உள்ளது என்றால் சரிதான். நாங்கள் தற்சமயம் பெரும்பத்தூரில் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். மருதையா எனது ஊர்க்காரர், ஒரே சமூகத்தை சார்ந்தவர், அவர் காவல்துறையில் பணிபுரிபவர், இடம் வாங்கி விற்பதை தொழிலாகக் கொண்டவர், அதனால் அவருடன் எனது கணவர் சேர்ந்துகொண்டு முதல் முதலில் சொத்தை வங்கியில் இருந்து மீட்க மருதையா உதவி செய்தார், அந்த சமயத்தில் மருதையா அனைத்து

சொத்துக்களையும் கிரையம் வாங்கிக்கொள்கிறேன் என எனது கணவரிடம் சொல்லியிருந்தார் என்றால் சரியல்ல. அதனால் எனது கணவருக்கும் மருதையாவுக்கும் நெருங்கிய பழக்கம் உண்டு என்றால் சரியல்ல. மருதையா பிரதிவாதியை அணுகி பிரச்சனையை சுமூகமாக முடிப்பதாக சொல்லி வா.சா.ஆ.1ன் அசலை பிரதிவாதி வழக்கறிஞரிடமிருந்து சங்கரன்கோவில் HDFC வங்கி முன்னிலையில் வாங்கிக்கொண்டு அந்த ஆவணத்தை பயன்படுத்தி, என்னிடம் கிரையம் வாங்கிய சொத்துக்களுடன் தனகுப் பாத்தியப்பட்ட சொத்தையும் சேர்த்து அடமானம் வைத்துள்ளார்என்றால் சரியல்ல. மேற்படி விவரங்கள் எனது கணவருக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ன் அசலை மருதையாவிடம் பிரதிவாதி திரும்ப தரக்கோரியபோது, தர மறுத்து கொலை மிரட்டல் விடுத்ததால் பிரதிவாதி சங்கரன்கோவில் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் CRLMP.No.1/2025 in CRLMP.20/2023 வழக்கிட்டு மருதையா மீது நடவடிக்கை எடுக்க உத்தரவு பெற்றுள்ளார் என்றால் தெரியாது. CRLMP.No.1/2025 in CRLMP.20/2023 உத்தரவின்படி கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையத்தில் அசல் ஆவணம் ஞானப்பிரகாசி மற்றும் மருதையாவிடமிருந்து கிடைக்கப்பெற்றது என தெரிவித்து நீதிமன்றத்தில் 22.04.2025ல் அறிக்கை சமர்ப்பித்துள்ளார் என்றால் தெரியாது. தற்சமயம் அசல் ஆவணம் சங்கரன்கோவில் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் உள்ளது என்றால் தெரியாது. அதனால் அசல் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல, ஆள் மாறாட்ம் மூலம் கிரையம் பெற்ற சொத்துக்கள் அனைத்தும் தற்சமயம் விற்பனை செய்துவிட்டதால் தாவா சொத்துக்களைப் பொறுத்து பரிகாரம் கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

**மறுவிசாரணை இல்லை.**

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2025.10.23 17:32:25 +0530